மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.

முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்

2026–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆவணித்திங்கள் 14 ம் நாள்

<u>அசல் வழக்கு எண். 130/2016</u>

<u>CNR No.TNTI14-000153-2016</u>

சாமியாத்தாள் ... வாதி

/எதிர்/

1. பெரியம்மாள் (இறந்துவிட்டார்)
(Amended as per order in IA No.4/2024 dated 16.10.2024)
2. ராஜேஷ்
3. அழகேசன்
4. ஆறுமுகம்
5. மணி
6. உத்தமி
7. ஈஸ்வரன்
8. செந்தில்குமார்
9. பவித்ரா
10. சாமியாத்தாள்
11. குப்புசாமி நாடார் (இறந்துவிட்டார்)
12. மாரியம்மாள்
13. வடிவேல் (எ) ரவி
14. சுப்பிரமணி
15. சாந்தி
16. தனபாக்கியம்
17. லட்சுமி
18. தங்கவேல்

19. சொர்ணாத்தாள்
20. தனபாக்கியம்
21. ரத்தினம்
22. அர்சுனன்
23. பொன்னம்மாள்
24. முத்துப்பிள்ளை
25. முத்தாயம்மாள் (எ) முத்துப்பிள்ளை
26. துரைசாமி
27. குழந்தாயம்மாள்

(Amended as per order in IA No.869/2022 dated 09.08.2024)
(Amended as per order in IA No.3/2024 dated 18.12.2024)
(Amended as per order in IA No.5/2025 dated 27.03.2026 &
IA No.9/2025 dated 10.02.2026)

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.08.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.S.ராமகிருஷ்ணன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் 2, 3, 5 பிரதிவாதிகள் தாமே ஆஜராகியும், 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 4, 8, 10, 14 முதல் 25 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

தீர்ப்புரை

தாவா சொத்துக்களை நலந்திகடு கண்டு 3 சம பாகங்களாக பங்கிட்டு அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் செய்து கொடுக்கும்படிக்கும், மேற்படிவீதம் பாகப்பிரிவினை செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிடும்படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–

i) தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோருக்கு பூர்வீகப் படியும் பட்டா என்.1507 மற்றும் 1508ன் படியும் பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களை கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பைசூல் படி பாகம் செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள். தாவா சொத்தானது முத்தப்ப நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். முத்தப்ப நாடார் இறந்துவிட்டார். முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன், செல்லம்மாள், சாமியாத்தாள் ஆகியோர் மக்கள் ஆவார்கள். பழனியப்பன் இறந்துவிட்டார்.

ii) கருப்பண நாடாருக்கு சின்ன பழனியப்ப நாடார், பெரிய பழனியப்ப நாடார் என்ற இரண்டு ஆண் மக்கள். பெரிய பழனியப்ப நாடார் வாரிசுகள் 18 முதல் 21 பிரதிவாதிகள், சின்ன பழனியப்ப நாடார் வாரிசுகள் 22 முதல் 25 பிரதிவாதிகள் ஆவார்கள். ஒரு முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன் (எ) சின்ன பழனி என்ற ஆண் மகன் மற்றும் செல்லம்மாள், சாமியாத்தாள் இரண்டு பெண் மக்கள் வாரிசுகள். முத்தப்ப நாடார் மகன் பழனியப்பன் (எ) சின்ன பழனி இறந்துவிட்டார்.

மேற்படியாரின் வாரிசுகள் 1ம் பிரதிவாதி, பழனியப்பன் (எ) சின்ன பழனி மனைவி ஆவார். மேற்படி பெரியம்மாள் இறந்துவிட்டார். மேற்படி பழனியப்பன் (எ) சின்னபழனி, 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் 6 முதல் 9 பிரதிவாதிகள் ஆவார்கள். வாதி முத்தப்ப நாடார் பெண்மகள். முத்தப்ப நாடார் மற்றொரு பெண் மகள் செல்லம்மாள் இறந்துவிட்டார். மேற்படியாரின் வாரிசுகள் 2 முதல் 5 பிரதிவாதிகள். ஒரு காட்டப்பன் (எ) கிட்டப்ப நாடாருக்கு குப்புச்சாமி நாடார், செல்லப்பன் என்ற ஆண் மக்கள், 10ம் பிரதிவாதி சாமியாத்தாள் மற்றும் மற்றொரு பெண்மகள் மேற்படியார் இறந்துவிட்டார். மேற்படியாரின் வாரிசுகள் 14 முதல் 16 பிரதிவாதிகள், கிட்டப்ப நாடார் மகன் குப்புச்சாமி நாடார், 11ம் பிரதிவாதி, செல்லப்பன் ஆகியோர் இறந்துவிட்டார்கள். மேற்படியாரின் வாரிசுகள் 12, 13 பிரதிவாதிகள்.

iii) தாவா சொத்தான ஏ செட்யூல் சொத்தினை பொறுத்து 10ம் பிரதிவாதி சாமியாத்தாளுக்கு தெரியாமல் சொத்துக்களை பொறுத்து கடந்த 10.11.1999ம் தேதி ஏற்படுத்திக் கொண்ட பாகக்காரரர் பத்திரம் கட்டுப்படுத்தாது என்றும் சொத்தில் பாகம் செய்து கொடுக்க வேண்டும் என கண்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.206/2002ல் இ.ம.எண்.426/2013ல் கடந்த 30.09.2022ம் தேதி தாவா 2வது அயிட்ட சொத்தினை பொறுத்து பொதுவில் பாகம் ஒதுக்கி கடந்த 30.09.2022ம் தேதி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாவாவில் அவசியமான தரப்பினர்களை கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் 11ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் மேற்படியாரின் வாரிசுகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். இறந்து போன பழனியப்பன் மனைவி 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகள் முத்தப்ப நாடாரின் பெண் மக்களான செல்லம்மாளின் வாரிசுகள் ஆவார்கள். முத்தப்ப

நாடார் இறந்ததற்கு பின்பு மேற்படி சொத்துக்களை உபயவாதிகள் அனைவரும் பொதுவாக இந்து வாரிசுரிமைப்படி அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்தில் தலா முன்றில் ஒரு பாகம் பொதுவில் முத்தப்ப நாடார் வாரிசுகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்டுள்ளது.

iv) பொதுவில் பாத்தியபட்ட சொத்துக்களை பொதுவில் அனுபவித்து வர இயலாத காரணத்தால் சொத்துக்களை நலம்திகடு கண்டு பாகம் செய்து கொள்ள கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கேட்டதற்கு பழனியப்ப நாடார் மனைவி பெரியம்மாள் மற்றும் மற்ற பாகஸ்தர்கள் வீண் சாக்குபோக்கு சொல்லி வருகிறார்கள். உபயவாதிகள் தாவா சொத்துக்களை பொதுவில் அனுபவித்து வர இயலாத காரணத்தால் சொத்துக்களை நலம்திகடு கண்டு 3 சம பாகங்களாக பங்கிட்டு அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு தனி சுவாதீனம் கொடுக்க வேண்டி வழக்கறிஞர் முலம் கடந்த 01.03.2016ம் தேதி வழக்கறிஞர் முலம் அறிவிப்பு அனுப்பி மேற்படி அறிவிப்பினை பிரதிவாதிகள் கடந்த 07.03.2016ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார்கள். அதன் பின்பும் தாவா சொத்துக்களை நலம்திகடு கண்டு பாகம் செய்து கொள்ள முன் வரவில்லை. எனவே வாதிக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை செய்து மூன்று சமபாகங்களாக பங்கிட்டு அதில் ஒரு சமபாகத்தை வாதிக்கு ஒதுக்கியும் தனி சுவாதீனம் பரிகாரம் வழங்கியும் உத்தரவிட வேண்டும் என்பதே வாதி தரப்பு வழக்குரை சுருக்கமாகும்.

2) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 6, 7, 9, 12, 13, 26, 27 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:–

i) வாதியின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லதக்கதல்ல. இப்பிரதிவாதிகள் இந்த எதிர்

வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் (எ) காட்டப்பன் ஆகியோருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று வாதி வழக்குரையில் தெளிவாக ஒப்புக்கொண்ட நிலையில் கருப்பண நாடார் தற்போது உயிருடன் இல்லாததால் மேற்படி கருப்பண நாடாரின் வாரிசுகளான பெரிய பழனியப்ப நாடார் மற்றும் சின்ன பழனியப்ப நாடார் ஆகியோரும் அதேபோல் கிட்டப்பநாடார் (எ) காட்டப்பன் தற்போது உயிருடன் இல்லாததால் அவரது வாரிசுகளான குப்பணன், கிட்டப்பநாடார் (எ) காட்டப்பனின் மகன் லேட். செல்லப்பனின் மனைவி மாரியம்மாள் ஆகியோர் இந்த வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் ஆவார்கள். மேற்படி நபர்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படாததால் இந்த வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காத கோதாவினால் பாதிக்கப்பட்டுள்ளது.

iii) மேலும் தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் (எ) காட்டப்பன் ஆகியோருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று வாதி வழக்குரையில் தெளிவாக ஒப்புக்கொண்ட நிலையில் காங்கயம் தாலூக்கா, பாப்பினி கிராமத்தின் க.ச.333B, க.ச.333C இதற்கு ரீ.ச.எண். 1103/2 காலையில் உள்ள பு.ஏ.3.40 பூமியில் ஒரு பகுதியாக பு.ஏ. 1.05 பூமியை பொறுத்து மட்டும் பாகப்பிரிவினை கோரியிருப்பதால் மேற்படி காலையில் உள்ள பு.ஏ.2.35 விஸ்தீர்ண பூமி சேர்க்கப்படாமல் இருப்பதாலும் அதேபோல் பாப்பினி கிராமத்தின் க.ச. 334 ல் இதற்கு ரீ.ச.எண். 1101/8 ல் உள்ள

பு.ஏ.3.45 பூமியில் பு.ஏ. 1.16–1/2 பூமியை பொறுத்து மட்டும் பாகப்பிரிவினை கோரியிருப்பதால் மேற்படி காலையில் உள்ள பு.ஏ. 2.28–1/2 விஸ்தீர்ண பூமி சேர்க்கப்படாததால் மேற்படி வழக்கானது பகுதி பாகப்பிரிவினையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

iv) தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் பொறுத்து கருப்ப நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் (எ) காட்டப்பன் ஆகியோர் பைசூல் படி பாகம் செய்து கொண்டு தனித்தனியே அனுபவித்து வந்ததாகவும் மேற்படி பைசூலில் தாவா சொத்தானது முத்தப்ப நாடாருக்கு ஒதுக்கப்பட்டதாக வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதும் அவ்வாறு பைசூல் யார் முன்னிலையில் எங்கு வைத்து ஏற்பட்டது என்பதை பொறுத்தும் அதற்கான சாட்சிகளோ ஆவணமோ வாதி தாக்கல் செய்யாத நிலையில் மேற்படி தாவா சொத்தை பொறுத்து பைசூல்படி பாகம் ஏற்பட்டதாக கூறுவதும் உண்மையல்ல.

v) தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் ஆதியில் கருப்ப நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்பநாடார் (எ) காட்டப்பன் ஆகியோருக்கு பூர்வீகப்படி பாத்தியப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி நபர்கள் பெயரில் பட்டா எண். 1507 மற்றும் 1508 ல் பட்டா ஏற்பட்டது. மேற்படி தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து கருப்பநாடார். முத்தப்பநாடார், கிட்டப்பநாடார் (எ) காட்டப்பன் ஆகியோர் தங்களுக்குள் ஏற்பட்ட பைசூல் படி பாகம் செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்ததாக கூறுவது உண்மையல்ல. முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன் என்ற மகனோ செல்லம்மாள், சாமியாத்தாள் என்ற மகள்களோ கிடையாது. வாதி முத்தப்பநாடாரின் மகள் அல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் சின்னப்பழனி ஆகும்.

vi) தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் (எ) காட்டப்பனுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டதன் அடிப்படையில் ரீசர்வே செய்யப்பட்டு பட்டா எண். 1507 மற்றும் 1508ல் பட்டா வழுங்கப்பட்டும் இருந்து வந்த சொத்துக்களை மேற்படி மூன்று பேரும் பொதுவில் வைத்து பாகப்பிரிவினையின்றி அனுபவித்து வந்துள்ளார்கள். இந்நிலையில் மேற்படி மூன்று பேரும் இறந்து விட்டதால் மேற்படி கருப்பண நாடாரின் வாரிசுகளான பெரிய பழனியப்ப நாடார், சின்ன பழனியப்ப நாடாரும், முத்தப்பநாடாரும் அவரது மனைவி பெரியம்மாளும் இறந்து விட்டதாலும் அவரது ஒரே மகனான சின்னப்பழனியும் இறந்துவிட்டதால் அவரது மனைவியான 1ம் பிரதிவாதியும் மற்றும் கிட்டப்பநாடார் (எ) காட்டப்பன் இறந்து விடவே அவரது மகன் குப்பணனும் மற்றொரு மகன் செல்லப்பன் இறந்து விட்டதால் அவரது மனைவி மாரியம்மாளும் தரப்பினராக இருந்து கடந்த 10.11.1999ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

vii) மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் A செட்யூல் சொத்துக்கள் பெரிய பழனியப்ப நாடாருக்கும், B செட்யூல் சொத்துக்கள் சின்ன பழனியப்ப நாடாருக்கும், C செட்யூல் சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கும், D செட்யூல் சொத்துக்கள் குப்பணன் மற்றும் மாரியம்மாளுக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினையில் பிரிந்த C செட்யூல் சொத்துக்களை 1ம் பிரதிவாதி பாகம் அடைந்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை கட்டியும் பட்டா பெயர் மாற்றம் பெற்றும் தனிமையில் அனுபவித்து வருகிறார். இந்நிலையில் வாதி முத்தப்ப நாடாரின் மகள் என்ற கோதாவில் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 10.11.1999ம் தேதிய பாகப்பிரிவினையில் பிரிந்துள்ள C

செட்யூல் சொத்து விபரத்தையே தாவா சொத்து விபரமாக காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து விபரத்தை பொறுத்து வாதி எவ்வித ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இறந்த முத்தப்ப நாடாருக்கு பெரியம்மாள் என்ற மனைவி இருந்து அவரும் இறந்து விடவே மேற்படியார்களின் மகனான சின்னப் பழனியும் 1ம் பிரதிவாதியை வாரிசாக விட்டுவிட்டு இறந்து விட்டார்.

viii) மேற்படி முத்தப்ப நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்து கூட்டு பங்குதாரர்களுடன் சேர்ந்து கடந்த 10.11.1999ம் தேதி பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார். மேற்படி பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்கள் முழுவதும் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதனால் வாதி 1ம் பிரதிவாதிக்கு 10.11.1999ம் தேதிய பாகப்பிரிவினையில் பிரிந்த சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினைக்காக இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது. மேற்படி 10.11.1999ம் தேதியில் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதில் உள்ள தரப்பினர்கள் அவரவர்களுக்கு பிரிந்த பாகத்தை தனிமையில் சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார்கள். வாதி தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவது உண்மையல்ல. அதனால் வாதி 37(2) ன்படி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல. வாதி முத்தப்ப நாடாரின் வாரிசு என்று பொய்யான தகவலின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 6, 7, 9, 12, 13, 26, 27 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

3. 2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள Submitting Decree மெமோ :–

i) வாதி பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். வாதி தாவாவில் கோரியுள்ளபடி தாவா சொத்தில் முத்தப்ப நாடாரின் பெண் வாரிசான செல்லம்மாளின் வாரிசுகள் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா சொத்தில் செல்லம்மாளின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மூன்றில் ஒரு பாக பாத்தியம் உள்ளது. தாவா சொத்தில் செல்லம்மாளின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 12 ல் ஒரு பாக பாத்தியம் சித்திப்பதால் தாவாவில் வாதி கோரியுள்ளபடி தீர்ப்பு செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

4) எழுவினாக்கள் :–

மேற்படி இரு தரப்பு வாதுரைகளையும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 13.03.2017 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 முதல் 5 எழுவினாக்களை வனைந்துள்ளது.

5. எழுவினாக்கள் 1 முதல் 5 :–

எழுவினா – 1	Whether the suit is bad for partial partition?
எழுவினா – 2	Whether the suit is bad for non–joinder of necessary parties?
எழுவினா – 3	Whether the plaintiff is entitled for 1/3 share in the suit properties?
எழுவினா – 4	Whether the plaintiff is entitled for preliminary decree for partition?

எழுவினா – 5	To what other reliefs?

6. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி திருமதி.சாமியாத்தாள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியாக திருமதி. விஜயலட்சுமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி திருமதி. உத்தமி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, 6ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாக திரு. பழனிச்சாமி என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கின் தீர்வுக்காக இன்று இந்நீதிமன்றத்தால் இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.206/2002 என்ற வழக்கில் இ.ம.எண்.426/2013 என்ற இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் அளவு வரைபடம் ஆகியவை நீ.ம.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோருக்கு பூர்வீகப் படியும் பட்டா என்.1507 மற்றும் 1508ன் படியும் பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களை கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பைசூல் படி பாகம் செய்து கொண்டு

தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்தானது முத்தப்ப நாடாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் இறந்துபோன முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன், செல்லம்மாள், சாமியாத்தாள் ஆகியோர் மக்கள் என்றும் பழனியப்பன் இறந்துவிட்டார் என்றும் தாவா சொத்தான ஏ செட்யூல் சொத்தினை பொறுத்து 10ம் பிரதிவாதி கடந்த 10.11.1999ம் தேதி ஏற்படுத்திக் கொண்ட பாகக்காரர் பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் தாவா சொத்தில் பாகம் செய்து கொடுக்க வேண்டும் என கண்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.206/2002ல் இ.ம.எண்.426/2013ல் கடந்த 30.09.2022ம் தேதி தாவா 2வது அயிட்ட சொத்தினை பொறுத்து பொதுவில் பாகம் ஒதுக்கி கடந்த 30.09.2022ம் தேதி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்துக்களை உபயவாதிகள் அனைவரும் பொதுவாக இந்து வாரிசுரிமைப்படி அனுபவித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்துக்களில் தலா முன்றில் ஒரு பாகம் பொதுவில் முத்தப்ப நாடார் வாரிசுகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்டுள்ளது என்றும் எனவே தாவா சொத்துக்களைப் பொறுத்து 3 சமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கியும் மற்றும் தனி சுவாதீனம் பரிகாரம் வழங்கியும் உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டு மேலும் வாதி தரப்பில் எழுத்துமூலமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. 6, 7, 9, 12, 13, 26 மற்றும் 27 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் கருப்பண நாடாரின் வாரிசுகளான பெரிய பழனியப்ப நாடார் மற்றும் சின்ன பழனியப்ப நாடார் ஆகியோரும் அதேபோல் கிட்டப்பநாடார் (எ) காட்டப்பன் தற்போது உயிருடன் இல்லாததால் அவரது

வாரிசுகளான குப்பணன், கிட்டப்பநாடார் (எ) காட்டப்பனின் மகன் லேட். செல்லப்பனின் மனைவி மாரியம்மாள் ஆகியோர்கள் மற்றும் கருப்பண நாடார், கிட்டப்ப நாடார் மற்றும் முத்தப்ப நாடார் ஆகியோர்களின் வாரிசுகள் அனைவரும் இந்த வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர்கள் என்பதால் மேற்படியார்களை இந்த வழக்கில் சேர்க்கப்படாததால் இந்த வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காத கோதாவினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கானது பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தை பொறுத்து முத்தப்ப நாடார், கருப்பண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே பைசூல்படி பாகம் ஏற்பட்டதாக கூறுவதும் உண்மையல்ல என்றும் முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன் என்ற மகனோ செல்லம்மாள், சாமியாத்தாள் என்ற மகள்களோ கிடையாது என்றும் தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் (எ) காட்டப்பனுக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டதன் அடிப்படையில் ரீசர்வே செய்யப்பட்டு பட்டா எண். 1507 மற்றும் 1508ன் படி பாகப்பிரிவினையின்றி அனுபவித்து வந்து மேற்படியாரின் வாரிசுகளால் கடந்த 10.11.1999ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டு அதில் பாகம் ஒதுக்கப்பட்ட தாவா சொத்துக்களான C செட்யூல் சொத்துக்களை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும் வாதி தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவது உண்மையல்ல என்றும் அதனால் வாதி 37(2) ன்படி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதி முத்தப்ப நாடாரின் வாரிசு என்று பொய்யான தகவலின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9. எழுவினாக்கள் 1, 3 மற்றும் 4 க்கான தீர்வு :-

எழுவினா – 1	Whether the suit is bad for partial partition?
எழுவினா – 3	Whether the plaintiff is entitled for 1/3 share in the suit properties?
எழுவினா – 4	Whether the plaintiff is entitled for preliminary decree for partition?

10. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் ஒரு சென்னியப்ப நாடார் என்பவரின் மகன்களான கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் (எ) காட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு பூர்வீகப்படியும் பட்டா எண்.1507 மற்றும் 1508 ன்படியும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது உபய தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்பதைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் மேற்படியார்கள் பெயரிலான தாவா சொத்துக்களைப் பொறுத்து உரிமை ஆவணங்கள், பட்டா, சிட்டா உள்ளிட்ட மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கு வாதி தரப்பில் ஏற்கத்தக்க எவ்வித விளக்கமும் இல்லை.

11. வழக்குரை தாவா சொத்து விபரமாக பாப்பினி கிராமம் **க.ச.333 பி நெ. பு.ஏ.1.41 க.ச.333 சி நெ. பு.ஏ.1.26 ஆக மொத்தம் பு.ஏ.3.17 இதற்கு ரீ.ச.1103/2 பு.ஹெக்.1.38.0** இதற்கு செக்குபந்தி கருப்பண நாடார் பங்குக்கு வடக்கு,

தென்வடல் கை இட்டேரிக்கு கிழக்கு, கிட்டப்ப நாடார் பங்குக்கு தெற்கு, தென்வடல் ரோட்டுக்கு மேற்கு இதன் மத்தியில் **புஏ.1.05 க்கு** தீர்வை ரூ.1.18 பின்னும் ஷை காலையில் பு.ஏ.0.10 ல் உள்ள கிணர் 1 மற்றும் பொது இடத்தில் மூன்றில் ஒரு பங்கும், **க.ச.334 நெ. பு.ஏ.3.35 க்கு தீர்வை 3.74 (இதற்கு ரீ.ச.1101/8 பு.ஹெக்.1.40** இதில் கருப்பண நாடார் பூமிக்கு வடக்கு, தெற்கு, பழனிச்சாமி கவுண்டர் பூமிக்கு கிழக்கு, 13 அடி அகல தென்வடல் தடத்துக்கு மேற்கு இதன் மத்தியில் **பு.ஏ.1.13 ம்** ஷை பூமிக்கு செல்ல பொதுவில் விடப்பட்டுள்ள பொது தடம் பு.ஏ.0.07 ல் பொதுவில் பாதி பு.ஏ.0.3–1/2 ரீ.ச.1103/2 நெ. காலையில் பு.ஏ.018 ல் உள்ள 20x20x40 அடி து. கிணர் 1 ல் 3 ல் 1 பங்கு கிணர் மற்றும் தடம் பு.ஏ.0.06 பூமியும் என்று சொல்லப்பட்டுள்ளது.

12. வாதி தரப்பில் வழக்குரையிலும், வா.சா.1 ன் சாட்சியத்திலும் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் ஒரு கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு பூர்வீகப்படியும் பட்டா எண்.1507 மற்றும் 1508 ன் படியும் பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களை கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பைசூல்படி பாகம் செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்தானது முத்தப்ப நாடாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் முத்தப்ப நாடார் இறந்துவிட்டார் என்றும் முத்தப்ப நாடாருக்கு பழனியப்பன் (எ) பழனி, செல்லம்மாள், சாமியாத்தாள் ஆகியோர்கள் மக்கள் என்றும் மேற்படி இறந்துபோன பழனியப்பன் மனைவி 1 ம் பிரதிவாதி என்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் முத்தப்ப நாடாரின் பெண் மக்களான செல்லம்மாளின் வாரிசுகள் என்றும் முத்தப்ப நாடார் இறந்துவிட்ட பின்பு மேற்படி

சொத்துக்களை வாதியும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் கூட்டாக பொதுவில் வைத்து இந்து வாரிசுரிமைப்படி அனுபவித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்தில் தலா 3ல் ஒரு பாகம் பொதுவில் முத்தப்ப நாடாரின் வாரிசுகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

13. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் <u>தாவா சொத்தானது பாப்பினி கிராமம், க.ச.எண்.333/பி–ல் பு.ஏ.1.41 மற்றும் க.ச.333/சி–ல் புஏ.1.26 ஆக மொத்தம் பு.ஏ.3.17 கொண்டது என்றால் சரிதான். மேற்படி பு.ஏ.3.17ல் பு.ஏ.1.05ஐ தான் பாகப்பிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.334ல் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.3.35 ஏக்கர் அதில் 1.13ஐ பொறுத்து மட்டும் பாகப்பிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.333/பி மற்றும் சி–ல் பு.ஏ.3.17 மற்றும் க.ச.334ல் பு.ஏ.3.35 பூமியும் கருப்ப நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் என்கின்ற காட்டப்பன் ஆகியோர்களுக்கு பூர்வீக வகையில் பொதுவில் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பாப்பினி கிராமம் பட்டாப்படி பட்டா எண்.1507, 1508 படி மேற்படி மூவருக்கும் பாத்தியப்பட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்</u> என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14. தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பைசலின் அடிப்படையில் பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படியார் இறந்ததற்கு பின்பு தாவா சொத்துக்களை மேற்படியாரின் வாரிசுகளான வாதி மற்றும் 1 முதல் 5

பிரதிவாதிகள் கூட்டாக பொதுவில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் வாதிக்கு தாவா சொத்துக்களில் கூட்டாக பொதுவில் 3 ல் 1 பங்கு பாக பாத்தியம் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் வழக்குரையிலும், வா.சா.1 ன் முதல் விசாரணை சாட்சியத்திலும் முத்தப்ப நாடார் எந்த தேதியில் இறந்தார் என்பதைப் பொறுத்தும் முத்தப்ப நாடார் மனைவி உயிருடன் உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா என்பதை பொறுத்தும் சங்கதிகள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

15. மேலும் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் மற்றும் மேற்படியாரின் வாரிசுகளான பழனி (எ) பழனியப்பன், செல்லம்மாள் ஆகியோர்களின் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் வாரிசு சான்றிதழ்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கு வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித விளக்கமும் இல்லை. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **கருப்ப நாடார், கிட்டப்ப நாடார், முத்தப்ப நாடார் 1956 க்கு முன்னரே இறந்துவிட்டனர் என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார். முத்தப்ப நாடார் எந்த தேதியில் இறந்தார் என்பதை பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் வா.சா.1 சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து முத்தப்ப நாடார் என்பவர் 1956 க்கு முன்பே இறந்துவிட்டார் என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

16. வாதி தரப்பில் கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட பைசல் படி பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டு தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு தனிப்பட்ட முறையில்

மேற்படியாரால் அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் மேற்படியாரின் வாரிசு என்ற முறையில் தாவா சொத்துக்களில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு தாவா சொத்துக்களைப் பொறுத்து கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்குள் பைசல் எதுவும் ஏற்படவில்லை என்றும் தாவா சொத்துக்கள் மேற்படியார்களால் கூட்டாக பொதுவில் வைத்து அனுபவம் செய்து வரப்பட்டு தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படியார்களின் ஆண்வாரிசுகளால் கடந்த 1999 ம் வருடம் பதிவு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தனித்தனியாக அனுபவம் செய்து வரப்படுகிறது என்று மறுக்கப்பட்டுள்ளது.

17. கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்கள் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து பைசல் செய்துகொண்டு பாகம் பிரித்துக் கொண்டதில் தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்டது என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் முழுமையான பொறுப்பு வாதி வசமே உள்ளது. ஆனால் வாதி தரப்பில் தங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார் ஆகியோர்கள் எப்போது எங்கு வைத்து யார் யார் முன்னிலையில் என்ன பைசல் செய்து கொண்டார்கள் என்பதைப் பொறுத்தும் மேற்படி பைசலில் பூர்வீக சொத்துக்களில் யார் யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகம் ஒதுக்கப்பட்டது என்பதைப் பொறுத்தும் மேற்படி பைசல் வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டதா

அல்லது ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதா என்பதைப் பொறுத்தும் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. மேலும் மேற்படி சங்கதிகளை பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

18 வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **தாவா சொத்துக்களை பொறுத்து பைசூல் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். பைசூல்படி பாகம் எதுவும் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். கருப்ப நாடார், கிட்டப்ப நாடார், முத்தப்ப நாடார் ஆகியோர்கள் பைசூல்படி பாகங்களை பிரித்து பூமியை ஓட்டவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரங்கள் 10.11.1999 ல் கருப்ப நாடாரின் வாரிசுகளும் முத்தப்ப நாடாரின் வாரிசான 1ம் பிரதிவாதியும் கிட்டப்ப நாடாரின் வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்து விபரத்தையே வழக்குரை சொத்து விபரமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

19. மேற்படி வா.சா.1ன் சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து கருப்ப நாடார், கிட்டப்ப நாடார், முத்தப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே பைசல் எதுவும் நடைபெறவில்லை என்பதும் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு தனிப்பட்ட முறையில் பாகம் ஒதுக்கப்படவில்லை என்பதும் வா.சா.1 ஆல் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. இது வாதியின் வழக்குரை சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளது.

20. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே பைசல் ஏற்பட்டது என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

21. மேலும் 1956 க்கு முன்பு தன் தகப்பனாரான முத்தப்ப நாடார் என்பவர் இறந்துவிட்டார் என்று வா.சா.1 தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இந்நீதிமன்றம் 2014 (4) CTC Page No.1 Badmavathy Vs. Thamaravarthini என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன் தீர்ப்புரையை பரிசீலித்தபோது அதில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

> “Now, the plaintiffs have filed the suit for partition claiming right in their father’s share, who died prior to Hindu Succession Act, 1956. Since the provisions of the Hindu Succession Act, 1956 was not given retrospective effect, it has only prospective application. If at all, the daughters could have their share in the property of her mother provided later got any independent share on partition during her life time. In the absence of partition, the claim of the daughter is not tenable. Since under the provisions of the Hindu Succession Act, 1956, the plaintiffs are not entitled to claim for partition of their father’s property who died in the year 1946 i.e., before coming into the force of the Hindu Succession Act, 1956, the lower appellate court rightly dismissed the suit in too”

22. மேலே கண்ட முன் தீர்ப்புரையில் வாதிகளான மகள்கள் தனது தகப்பனாரின் சொத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கில் இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 நடைமுறைக்கு வருவதற்கு முன்பு வாதிகளின் தகப்பனார் இறந்துவிட்டதால் மேற்படி சட்டத்தின்படி முன்பே இறந்துபோன தகப்பனாரின் சொத்துக்களில் வாதிகள் பாகம் கோர இயலாது என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் 1956 க்கு முன்பே இறந்துவிட்டார் என்பதும் தாவா சொத்துக்களைப் பொறுத்து முத்தப்ப நாடார், கருப்பண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே பைசல் அடிப்படையில் பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்பதும் வா.சா.1 ன் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

23. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின்படி வாதியின் தகப்பனார் முத்தப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே தாவா சொத்துக்களைப் பொறுத்து பைசல் ஏற்பட்டு தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 1/3 பாகம் வாதிக்கு கூட்டாக பொதுவில் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் முத்தப்ப நாடார் 1956 க்கு முன்பே இறந்துவிட்டார் என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் முத்தப்ப நாடார் 1956 க்கு முன்பே இறந்த தேதியில் முத்தப்ப நாடாருக்கு யார்யார் வாரிசுகளாக இருந்தார்கள் என்பதைப் பொறுத்தும் தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படியார் இறந்த சமயத்தில் அமுலில் இருந்த எந்த வாரிசுரிமை சட்டப்படி முத்தப்ப நாடாரின் 1/3 பங்கானது யாருக்கு எவ்வாறு

எந்த இறங்குரிமையின் அடிப்படையில் சென்றடைந்தது என்பதைப் பொறுத்தும் தாவா சொத்துக்களில் வாதிக்கு வாரிசுரிமை அடிப்படையில் எவ்வாறு உரிமை ஏற்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தும் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதி வசமே உள்ளது. ஆனால் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை.

24. வாதி தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்து 10ம் பிரதிவாதி சாமியாத்தாள் மற்றும் இதர நபர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள 1999ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணம் குறித்து தனக்கு தெரியாது என்றும் மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் தாவா சொத்தில் வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10.11.1999 தேதியிட்ட பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களின் ஆண் வாரிசுகளான சின்னபழனியப்ப நாடார், பெரியபழனியப்ப நாடார் மற்றும் குப்பணன் மற்றும் மேற்படியார்களின் இறந்துபோன ஆண் வாரிசுகளின் மனைவிகளான மாரியம்மாள் மற்றும் பெரியம்மாள் ஆகியோர்கள் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

25. பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் பெரியபழனியப்ப நாடார் என்பவருக்கு அதில் கண்ட ஏ அட்டவணை சொத்துக்களாக தாவா சொத்தான <u>க.ச.333பி ரீ.ச.எண்.1103/2ல்</u> செக்குபந்தி கண்டு <u>பு.ஏ.0.52-1/2</u> இதன் மத்தியில் கிணர் வாரி பொதுஇடம் பு.ஏ.0.10ல்

பொதுவில் 1/4 பங்கும், க.ச.334 ரீ.ச.எண்.1101/8 இதில் செக்குபந்தி கண்டு பு.ஏ.1.13 பூமியும் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. 2ம் இலக்கமிட்ட சின்னபழனியப்ப நாடார் என்பவருக்கு க.ச.333பி, க.ச.333சி பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.0.52–1/2 பூமியும், க.ச.334 நெ. பு.ஏ.3.35 இதில் பு.ஏ.1.13 பூமியும் பின்னும் மேற்படி காலையில் பு.ஏ.0.07 இதில் பொதுவில் பாதி பு.ஏ.0.03–1/2 சென்ட் பூமியும், சி அட்டவணை சொத்துக்களாக பெரியம்மாள் என்பவருக்கு க.ச.333பி, க.ச.333சி பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.1.05 பூமியும், க.ச.334 நெ. பு.ஏ.3.35 இதில் பு.ஏ.1.13 பூமியும், மேற்படி காலையில் செக்குபந்திப்படி தடம் பு.ஏ.0.07 இதில் பொதுவில் பாதி பு.ஏ.0.03–1/2 சென்ட் பூமியும், டி அட்டவணை சொத்துக்களாக 4 மற்றும் 5 இலக்கமிட்ட குப்பணன் மற்றும் மாரியம்மாள் என்பவருக்கு க.ச.333பி, க.ச.333சி பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.1.34 பூமியும் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

26. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 ஆவணமான 17.07.1978 தேதியிட்ட கருப்பணநாடார் மக்கள் பெரியபழனி நாடார், சின்ன பழனிநாடார் ஆகியோர்களுக்கு சென்னியப்ப நாடார் மகன் கிட்டப்ப நாடார், கிட்டப்ப நாடார் மக்கள் செல்லப்ப நாடார், குப்பண நாடார் ஆகியோர்கள் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும்போது தாவா சொத்தான பாப்பினி கிராமம் **க.ச.334 பு.ஏ.3.35க்கு 3.75** இதில் **பொதுவில் 1/3 பு.ஏ.1.12** பூமிகளை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து மேற்படி ஆவண தேதியான 17.07.1978 தேதியில் தாவா சொத்தான க.ச.334 பு.ஏ.3.35 பூமிகள் பாகப்பிரிவினையின்றி கூட்டாக பொதுவில் வைத்து தான் அனுபவம் செய்து வரப்பட்டுள்ளது என்பதும்

அதன் அடிப்படையிலேயே பொதுவில் என கண்டு மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

27. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **தாவா சொத்து விபரங்கள் 10.11.1999 ல் கருப்ப நாடாரின் வாரிசுகளும் முத்தப்ப நாடாரின் வாரிசுகளான 1ம் வாதியும் கிட்டப்ப நாடாரின் வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்து விபரத்தையே வழக்குரை சொத்து விபரமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்** என்றும் **10.11.1999 தேதியில் பாகப்பிரிவினை செய்தது பற்றி எனக்கு முதலில் தெரியாது பின்னிட்டு ஒரு வாரத்தில் தெரிந்து கொண்டேன்** என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் வழக்குரையில் பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தை குறித்து குறிப்பிட்டு சங்கதிகள் எதுவும் வாதி தரப்பில் சொல்லப்படவில்லை. 2026ம் ஆண்டு வழக்குரை திருத்தப்பட்ட சமயத்தில் தான் பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தை குறித்து வாதி தரப்பில் வழக்குரையில் சங்கதிகள் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது.

28. பி.வா.சா.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு ஒரு வாரத்திலேயே அதை பற்றி தெரிந்து கொண்டதாக வா.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த வழக்கு 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டபோது அதை பொறுத்து வழக்குரையில் சங்கதிகள் எதுவும் சொல்லப்படவில்லை என்பதற்கு வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க எவ்வித விளக்கமும் இல்லை. பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் வாதி ஒரு தரப்பினராக இல்லை. மேலும் உபய தரப்பினர்களின் வழக்காவணங்கள் மற்றும்

வா.சா.1ன் சாட்சியத்தின் பரிசீலனையில் இருந்து மேற்படி பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1ம் பிரதிவாதியான பெரியம்மாள் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சி அட்டவணை சொத்துக்களை வழக்குரை சொத்து விபரமாக கண்டு தான் இந்த வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

29. வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.206/2002 வழக்கில் இ.ம.எண்.426/2013 இறுதிநிலை தீர்ப்பாணையில் கடந்த 30.09.2022ம் தேதி தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து வாதிக்கு கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ஆவணமான இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.206/2002 வழக்கின் 12.08.2003 தேதியிட்ட முதல்நிலை தீர்ப்பாணையை பரிசீலிக்கும்போது முத்தப்ப நாடார் மனைவியும் மற்றும் கிட்டப்ப நாடார் மகளுமான சாமியாத்தாள் என்பவரால் மேற்படி வழக்கானது தாவா சொத்தான க.ச.333பி, சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகளைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி சொத்துக்களில் மேற்படி வழக்கின் வாதிக்கு 1/12 பாகம் உள்ளது என முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

30. மேற்படி அ.வ.எண்.206/2002 வழக்கில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பெரியம்மாள் என்பவர் 10ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையில் வாதி ஒரு தரப்பினராக இல்லை. வா.சா.ஆ.9 ஆவணமான அ.வ.எண்.206/2002 இ.ம.எண்.426/2013ல் கடந்த 30.08.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையை பரிசீலிக்கும்போது மேற்படி மனுவில் 19வது பிரதிவாதியாக வாதியும், 20 முதல் 23 பிரதிவாதிகளாக

இவ்வழக்கின் 2 முதல் 5 பிரதிவாதிகளும் தரப்பினர்களாக மனுவின் பேரில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

31. வா.சா.ஆ.6 ஆவணமான அ.வ.எ.206/2002 வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணையில் சொத்து விபரமாக பாப்பினி கிராமம், **ப.க.ச.333 பி, சி ரீசர்வே எண்.1103/2 பு.ஹெக்.1.38.0 க்கு பு.ஏ.3.30 ம்** மேற்படி பூமிக்குள் உள்ள 20x20x20 அளவுள்ள து. கிணரில் பொதுவில் உள்ள பங்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்குரை சொத்து விபரமாக பாப்பினி கிராமம் **க.ச.333 பி நெ. பு.ஏ.1.41 க.ச.333 சி பு.ஏ.1.26 ஆக மொத்தம் பு.ஏ.3.13** இதற்கு ரீ.ச.1103/2 பு.ஹெக்.1.38.0 இதற்கு செக்குபந்தி கருப்பண நாடார் பங்குக்கு வடக்கு, தென்வடல் கையிட்டேரிக்கு கிழக்கு, கிட்டப்ப நாடார் பங்குக்கு தெற்கு, தென்வடல் ரோட்டுக்கு மேற்கு, இதன் மத்தியில் **பு.ஏ.1.05** மேற்படி காலையில் பு.ஏ.0.10 ல் உள்ள கிணர் 1 மற்றும் பொது இடத்தில் 3 ல் 1 பங்கு என்று சொல்லப்பட்டுள்ளது.

32. வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தான பாப்பினி கிராமம் க.ச.எண்.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2, 13500 சதுர மீட்டர் இதில் கிணறு 4 அடி பொதுப்பாதை 250 சதுரடி போக மீதமுள்ள 13250 ச.மீ அளவுள்ள பூமியை 12 சமபாகங்களாக பிரிவினை செய்து ஒவ்வொரு பாகமும் 1104 ச.மீ அளவுள்ள பூமியாக பங்கிட்டுள்ளதில் ஆணையர் வரைபடத்தில் கண்ட 1 ம் பாகத்தை மனுதாரர்/வாதிக்கு ஒதுக்கியும், 2 ம் பாகத்தினை 1 ம் பிரதிவாதிக்கும், 3 வது பாகத்தினை 2, 3 பிரதிவாதிகளுக்கும், 4 வது பாகத்தினை 4 ம் பிரதிவாதி முதல் 7 பிரதிவாதிகளுக்கும், **5 முதல் 8**

பாகத்தினை 10ம் பிரதிவாதி மற்றும் 19 முதல் 23 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கியும் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

33. மேற்படி வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து அ.வ.எண்.206/2002 வழக்கானது ஒரு சாமியாத்தாள் என்பவரால் தாவா சொத்தான **க.ச.333பி மற்றும் 333சி பு.ஏ.3.30** பூமிகளை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையில் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் **க.ச.333பி மற்றும் 333சி பு.ஏ.3.30** பூமிகளில் கூட்டாக பொதுவில் நீதிமன்ற ஆணையர் அளவு வரைபடத்தில் கண்டுள்ள 5 முதல் 8 பாகங்கள் கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

34. வாதி தரப்பில் தங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார் ஆகியோர் பைசலின் அடிப்படையில் பாகம் செய்து கொண்டு தாவா சொத்துக்களை முத்தப்ப நாடார் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையாக இருந்திருக்கும் பட்சத்தில் முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார் ஆகியோர்களின் ஆண் வாரிசுகள் பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தை 1999ம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இதற்கு வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை.

35. மேலும் அ.வ.எண்.206/2002 வழக்கானது தாவா சொத்தான க.ச.333பி, 333சி ரீ.ச.1103/2 பு.ஏ.3.30 பூமிகள் முழுவதும் பாகம் பிரிக்கப்படாமல்

கூட்டாக பொதுவில் அனுபவம் செய்து வரப்படுவதாக கண்டே பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி சொத்துக்களில் வாதிக்கும் கூட்டாக பொதுவில் பூமிகள் பாகம் ஒதுக்கப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு பைசல் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்ட சொத்துக்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

36. வாதி தரப்பில் மேற்படி வா.சா.ஆ.9 ஆவணமான இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.206/2002 வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையின் ஓர் அங்கமான நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவை தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் இந்நீதிமன்றம் அ.வ.எண்.206/2002 வழக்கின் வழக்கு கோப்பில் உள்ள இ.ம.எண்.426/2013 மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை இவ்வழக்கின் முழுமையான தீர்விற்காக பரிசீலனை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே இவ்வழக்கின் முழுமையான தீர்விற்காக அ.வ.எண்.206/2002 வழக்கின் இ.ம.எண்.426/2013 மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் அளவு வரைபடம் ஆகியவற்றின் நீதிமன்ற சான்றிட்ட நகல் இன்று இந்நீதிமன்றத்தால் நீ.ம.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

37. மேற்படி நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள தாவா சொத்தான க.ச.333 பி மற்றும் 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 ல் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நடுப்பகுதியான 5 முதல் 8 பாகங்களானது சுமார் 4416 (1104x4) ச.மீ (சுமார் பு.ஏ.1.09 சென்ட்) பூமிகள் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி, வாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடுகள் செய்யப்பட்டதாக உபயவாதிகள் தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. எனவே வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.9 ஆன முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகள் நாளது தேதிவரை ரத்து செய்யப்படாமல் அமுலில் உள்ளது என்பது தெரிய வருகிறது.

38. மேற்படி வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 2022ம் ஆண்டு தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகளைப் பொறுத்து வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித மேல்முறையீடுகளும் செய்யப்படாத நிலையில் வாதியும், 2 முதல் 5 பிரதிவாதிகளும் முத்தப்ப நாடாரின் வாரிசு கிடையாது என்றும் 1ம் பிரதிவாதியின் கணவர் மட்டும் தான் முத்தப்ப நாடாரின் வாரிசு என்றும் முன்வைக்கப்பட்ட எதிர்வாதம் ஏற்கும்படியாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

39. மேலும் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து பாப்பினி கிராமம் க.ச.எண்.333 பி,

333 சி, ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகளைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கண்டுள்ள 1 முதல் 3 பாகங்கள் மேற்படி வழக்கின் வாதி சாமியாத்தாள் மற்றும் மேற்படி வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளான குப்புசாமி நாடார், மாரியம்மாள், ரவி ஆகியோர்களுக்கும், 4 வது பாகமானது மேற்படி வழக்கின் 4 முதல் 7 பிரதிவாதிகளான சுப்பிரமணி, சாந்தி, லட்சுமி ஆகியோர்களுக்கும் பாகம் ஒதுக்கப்பட்டும் அதற்கு தென்புறமுள்ள 5 முதல் 8 பாகங்கள் இவ்வழக்கின் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாகம் ஒதுக்கப்பட்டும், இதர பாகங்கள் இன்னும் பாகம் ஒதுக்கப்படாமலும் உள்ளது.

40. வாதி தரப்பில் தாவா சொத்துக்களான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2–ல் பு.ஏ.1.05 பூமிகளுக்கு செக்குபந்தியாக கருப்பண நாடார் பங்குக்கு வடக்கு, தென்வடல் கையிட்டேரிக்கு கிழக்கு, கிட்டப்ப நாடார் பங்குக்கு தெற்கு, தென்வடல் ரோட்டுக்கு மேற்கு என்றும் மேற்படி காலையில் பு.ஏ.0.10 ல் உள்ள கிணறு மற்றும் பொது இடம் ஆகியவை தன் தகப்பனாருக்கு பைசல் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களில் தனக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பாகம் பங்கு உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அ.வ.எண்.206/2002 வழக்கானது க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகள் கூட்டாக பொதுவில் அனுபவம் செய்து வரப்படுவதாக கண்டு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 2022 ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் 5 முதல் 8 பாகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

41. மேற்படி வா.சா.ஆ.6, வா.சா.ஆ.9 மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா வழக்குரை சொத்து விபரத்தில் கண்டுள்ள க.ச.333பி, 333சி ரீ.ச.1103/2 பு.ஏ.1.05 சொத்துக்களுக்கும் மற்றும் அ.வ.எண்.206/2002 வழக்கின் வழக்கு சொத்தான க.ச.333பி, 333சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 சொத்துக்கள் மற்றும் மேற்படி சொத்துக்களில் வா.சா.ஆ.9 மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்ட 5 முதல் 8 பாக சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் இடையே விஸ்தீரணம், செக்குபந்திகள் ஆகியவற்றில் பெருத்த முரண்பாடுகள் உள்ளது

42. தாவா சொத்துக்கள் பைசலின் அடிப்படையில் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டிருந்த சொத்துக்கள் என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் தாவா சொத்தான க.ச.333பி மற்றும் 333சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 பூமிகள் மற்றும் அ.வ.எண்.206/2002 வழக்கு சொத்தான க.ச.333பி மற்றும் 333சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகள் மற்றும் வா.சா.ஆ.9, நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ள 5 முதல் 8 பாக சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் இடையே விஸ்தீரணம் மற்றும் செக்குபந்தி ஆகியவற்றில் பெருத்த முரண்பாடுகள் உள்ளது என்பது தெரிய வரும் நிலையில் மேற்படி இரண்டு சொத்துக்களும் ஒரே சொத்துக்கள் தான் என்பதை பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

43. மேலும் இவ்வழக்குரை தாவா சொத்தான க.ச.333 பி மற்றும் 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 பூமிகள் தான் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்து நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கண்டுள்ள 5 முதல் 8 பாக சொத்துக்கள் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையானது நாளது தேதிவரை ரத்து செய்யப்படாமல் அமுலில் உள்ள நிலையில் மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கு கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தனது பங்கு பாகத்தை பொறுத்து தனியாக சுவாதீனம் பெற உரிய நடவடிக்கைகள் எடுக்க வாதிக்கு போதிய வாய்ப்புகளும் வசதிகளும் உள்ளது.

44. எனவே இவ்வழக்கின் தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி பு.ஏ.1.05 சொத்துக்கள் மற்றும் அ.வ.எண்.206/2002 வழக்கின் தாவா சொத்துக்களுக்கு இடையே விஸ்தீரணம் மற்றும் செக்குபந்தி ஆகியவற்றில் பெருத்த முரண்பாடுகள் உள்ள நிலையில் இவ்வழக்கிலும் அ.வ.எண்.206/2002 வழக்கிலும் க.ச.333 பி மற்றும் 333 சி என்ற பூமிகளின் காலை எண்கள் ஒன்றாக இருப்பதை மட்டும் வைத்துக்கொண்டு தாவா சொத்துக்களான க.ச.333 பி, 333 சி பு.ஏ.1.05 பூமிகள் தான் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் க.ச.333 பி, 333 சி பு.ஏ.1.05 பூமிகள் வாதியின் தகப்பனாரான முத்தப்ப கவுண்டருக்கு தனிப்பட்ட

முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 1/3 பாகம் உரிமை உள்ளது என்றும் தீர்மானம் செய்ய இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

45. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணமான இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.110/2008 வழக்கின் தீர்ப்புரையை பரிசீலிக்கும்போது கிட்டப்ப நாடாரின் வாரிசுகளான இவ்வழக்கின் 11 மற்றும் 12 பிரதிவாதிகளால் மேற்படி வழக்கானது பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் மேற்படியார்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்ட டி அட்டவணை சொத்துக்களான <u>க.ச.333 பி, க.ச.333 சி</u> பூமியில் <u>பு.ஏ.1.34</u> பூமிகளைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது கடந்த 03.07.2015 தேதியில் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

46. மேற்படி அ.வ.எண்.110/2008 வழக்கின் தீர்ப்புரையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து அ.வ.எண்.206/2002 வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் வாதிகள் மேற்படி வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ள நிலையில் மேற்படி வழக்கின் தீர்ப்பாணை தங்களுக்கு தெரியாது என வாதிகள் சொல்லியுள்ளது ஏற்கும்படியாக இல்லை என்றும் வா.சா.ஆ.1 ஆன 1999 வருடத்திய பாகப்பிரிவினை ஆவணம் உரிமை மூலத்திற்கான ஆவணம் அல்ல என்றும் தாவா சொத்துக்களில் வாதிகள் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதி ஒரு தரப்பினராக இல்லை. மேற்படி தீர்ப்புரைக்கு எதிராக மேல்முறையீடுகள்

செய்யப்பட்டதாக உபயவாதிகள் தரப்பில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை.

47. வாதி தரப்பில் தாவா சொத்துக்களான க.ச.எண்.334, 333 பி, 333 சி பூமிகள் ஆதியில் முத்தப்ப நாடார், கருப்பண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தான க.ச.எண்.334 ரீ.ச.எண்.1101/8 பு.எ.3.35 பூமிகள் மேற்படி அ.வ.எண்.206/2002 பாகப்பிரிவினை வழக்கில் சொத்துக்களாக சேர்க்கப்படவில்லை. மேலும் அ.வ.எண்.110/2008 வழக்கானது க.ச.333 பி, க.ச.333 சி பூமியில் பு.ஏ.1.34 பூமிகளைப் பொறுத்து மட்டுமே விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.110/2008 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ள காரணத்தினாலேயே மேற்படி தீர்ப்புரையின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.3 ஆவணமான பாகப்பிரிவினை ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும் மேற்படி தீர்ப்புரையின் அடிப்படையில் தீர்மானம் செய்யப்பட்டுவிட்டது என்று கருத இயலாது. மேலும் பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் அடிப்படையில் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதம் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக இல்லை.

48. வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 17.07.1978 ம் தேதியில் தாவா சொத்தான பாப்பினி கிராமம் க.ச.334 பு.ஏ.3.35 க்கு 3.75 இதில் **பொதுவில் 1/3 பு.ஏ.1.12 பூமிகளை** கருப்பணநாடார் மக்கள் பெரியபழனி நாடார்,

சின்ன பழனிநாடார் ஆகியோர்கள் கிட்டப்ப நாடார், கிட்டப்ப நாடார் மக்கள் செல்லப்ப நாடார், குப்பண நாடார் ஆகியர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள். இதன்மூலம் மேற்படி ஆவண தேதிவரை தாவா சொத்துக்கள் பாகப்பிரிவினையின்றி கூட்டாக பொதுவில் வைத்து அனுபவம் செய்து வரப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் கருப்பண நாடார் மக்கள் பெரியபழனி நாடார் மற்றும் சின்ன பழனி நாடார் ஆகியோர்களுக்கு தாவா சொத்தான க.ச.334 ரீ.ச.எண்.1101/8 இதில் செக்குபந்தி கண்டு தலா பு.ஏ.1.13 பூமிகளும், 1ம் பிரதிவாதியான பெரியம்மாள் என்பவருக்கு க.ச.334 நெ. பு.ஏ.3.35 இதில் பு.ஏ.1.13 பூமியும், பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

49. பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களான புல எண்.1103/2 ஏ பூமிக்கான கணினி சிட்டா மற்றும் அ பதிவேட்டை பரிசீலிக்கும்போது பெரியபழனியப்ப நாடார், சின்னபழனியப்ப நாடார் சின்ன பழனி மனைவி பெரியம்மாள், காட்டப்பன் மகன்கள் குப்பன், செல்லப்பன், மாரியம்மாள், அர்ஜீனன் ஆகியோர்கள் பெயருக்கு வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்தான க.ச.334 ரீ.ச.எண்.1101/8 பூமியைப் பொறுத்து உபய வாதிகள் தரப்பில் எவ்வித வருவாய்த்துறை ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணமாக வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பும், வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களாக அஞ்சல் ஒப்புதல் அட்டைகளும், வா.சா.ஆ.5 ஆவணமாக திருப்பப்பட்ட அஞ்சல் உறைகளும், பி.வா.சா.ஆ.1 ஆவணமாக வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பும், பி.வா.சா.ஆ.2 ஆவணமாக பிரதிவாதிகளால் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

50. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் ஆதியில் முத்தப்ப நாடார், கருப்பண நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு மேற்படியார்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பைசூலின் அடிப்படையில் தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 மற்றும் க.ச.334 ரீ.ச.எண்.1101/8 பு.ஏ.1.13 பூமிகள் முத்தப்ப நாடாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் முத்தப்ப நாடாரின் வாரிசு என்ற முறையில் மேற்படி சொத்துக்களில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பாகம் பாத்தியம் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டு இவ்வழக்கானது வாதியால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை பொறுத்து வாதி தனது சொந்த தகுதியின் அடிப்படையில் நிரூபணம் செய்ய வேண்டுமே தவிர பிரதிவாதிகள் வழக்கில் உள்ள குறைபாடுகளை கொண்டு மட்டும் வாதிக்கு ஆதரவாக தீர்மானம் செய்ய இயலாது.

51. மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையிலும், வா.சா.1, வா.சா.2 மற்றும் பி.வா.சா.1, பி.வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் இரு தரப்பு சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்தும் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் எந்த தேதியில் இறந்தார் என்பதை பொறுத்தும் மேற்படியார் இறந்த தேதியில் யார்யார் வாரிசுகள் என்பதைப் பொறுத்தும் வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையில் மேற்படி முத்தப்ப நாடார் என்பவர் 1956 ம் ஆண்டுக்கு முன்பே இறந்துவிட்டார் என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தங்கள்

பூர்வீக சொத்துக்களை பொறுத்து கருப்பண நாடார், முத்தப்ப நாடார், கிட்டப்ப நாடார் ஆகியோர்கள் தங்களுக்குள் பைசல்படி பாகம் செய்து கொண்டு தனித்தனியாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் முத்தப்ப நாடாருக்கு தனிப்பட்ட முறையில் பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்களில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பாகம் பங்கு உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படவில்லை.

52. மேலும் மேலேகண்ட பரிசீனைகளின் அடிப்படையில் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.3.30 பூமிகளை பொறுத்து வாதிக்கு கூட்டாக பொதுவில் 5 முதல் 8 பாகங்கள் பாகம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி வீதம் வாதிக்கு கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கும் தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 சொத்துக்களுக்கும் இடையே செக்குபந்திகள் மற்றும் விஸ்தீரணம் ஆகியவற்றில் நிறைய முரண்பாடுகள் உள்ளது என்பது ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் தாவா சொத்தான க.ச.333 பி மற்றும் 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 பூமிகள் தான் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்து வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம்

செய்யப்படவில்லை. எனவே வா.சா.ஆ.9 தீர்ப்பாணையை அடிப்படையாக கொண்டு மட்டுமே தாவா சொத்தான க.ச.333 பி மற்றும் 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 பூமிகளில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது என தீர்மானம் செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

53. மேலும் மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கண்டுள்ள 5 முதல் 8 பாகங்கள் வாதிக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையானது நாளது தேதிவரை ரத்து செய்யப்படாமல் அமுலில் உள்ள நிலையில் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கு கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தனது பங்கு பாகத்தை பெற உரிய நடவடிக்கைகள் எடுக்க வாதிக்கு போதிய வாய்ப்புகளும் வசதிகளும் உள்ளது. ஆனால் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிக்கு கூட்டாக பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கும் தாவா சொத்தான க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 சொத்துக்களுக்கும் விஸ்தீரணம் மற்றும் செக்குபந்தி ஆகியவற்றில் முரண்பாடுகள் உள்ள நிலையில் வா.சா.ஆ.9 இறுதிநிலை தீர்ப்பாணையின் அடிப்படையிலேயே க.ச.333 பி, 333 சி ரீ.ச.எண்.1103/2 பு.ஏ.1.05 பூமிகளில் வாதிக்கு 3 ல் 1 பங்கு பாகம் உள்ளது என தீர்மானிக்கப்பட்டு விட்டதாகவும் வா.சா.ஆ.7 ஆன தீர்ப்புரையின் அடிப்படையிலேயே பி.வா.சா.ஆ.3 ஆன பாகப்பிரிவினை ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு கூட்டாக பொதுவில் 3 ல் 1 பாகம் பங்கு

உள்ளது என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாகவும் தீர்மானம் செய்ய இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

54. மேலும் மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் தாவா சொத்தான க.ச.334 ரீ.ச.எண்.1101/8 பு.ஏ.3.35 பூமிகள் அ.வ.எண்.206/2002 பாகப்பிரிவினை வழக்கில் சொத்துக்களாக சேர்க்கப்படாத நிலையில் மேற்படி பூமிகளை பொறுத்து பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் 1999 ம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் தன் தகப்பனாரான முத்தப்ப நாடார் 1956 க்கு முன்பே இறந்துவிட்டார் என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் என்பவருக்கு பைசலின் அடிப்படையில் பாகம் ஒதுக்கப்பட்டு மேற்படியாரால் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வரப்பட்டது என்றும் தாவா சொத்துக்களில் வாதிக்கு கூட்டாக பொதுவில் 1/3 பாகம் உள்ளது என்றும் வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து மேலேகண்ட ஒட்டுமொத்த விவாதங்களின் அடிப்படையில் தாவா சொத்துககளைப் பொறுத்து வாதிக்கு தாவாவில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து 1, 3 மற்றும் 4 எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

<u>55. எழுவினா எண்.2 க்கான தீர்வு :-</u>

எழுவினா - 2	Whether the suit is bad for non-joinder of necessary parties?

56. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் ஆதியில் கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு கூட்டாக பொதுவில் அனுபவித்து வரப்பட்ட பூமிகள் என்றும் தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படியார்களுக்குள் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்றும் எனவே தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் மேற்படியார்களின் அனைத்து வாரிசுகளும் அவசிய தரப்பினர்கள் என்றும் கருப்பண நாடார், முத்தப்ப நாடார் மற்றும் கிட்டப்ப நாடார் ஆகியோர்களின் வாரிசுகளான அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றும் சொல்லப்பட்டு மேற்படி சங்கதிகள் வாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு தாவா சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் வாதியின் தகப்பனாரான முத்தப்ப நாடார் என்பவருக்கு தனிப்பட்ட முறையில் பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றும் எனவே கிட்டப்ப நாடார் மற்றும் கருப்பண நாடார் ஆகியோர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

57. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் மட்டும் கட்சி சேர்க்கப்பட்டு பின்னிட்டு 6 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பினரர்களாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் பெரிய பழனியப்ப நாடார் என்பவரின் முதல் மனைவி இறந்துவிட்டார் என்றும் அவர்களுக்கு **அர்ஜீனன் மற்றும் பருவதம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அர்ஜீனன் மற்றும் பருவதம் ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால்**

<u>சேர்த்து இருப்பேன்</u> என்று நினைக்கிறேன். பெரிய பழனியப்ப நாடார் என்பவரின் 2வது மனைவியான பொன்னம்மாள் என்பவர் இந்த வழக்கில் 23ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் ஆமாம். பெரிய பழனியப்ப நாடார் என்பவருக்கு 2ம் மனைவி மூலம் 22ம் பிரதிவாதியும் மற்றும் துளசிமணி, அருக்காணி, சௌந்தரம், முத்துப்பிள்ளை ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். துளசிமணி என்பவர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் கணவர் பெயர் லட்சுமணன் என்றும் அவருடைய வாரிசுகள் பெயர்கள் சர்மிளா, சங்கீதா மற்றும் சக்திவேல் என்றால் ஆமாம். துளசிமணியின் வாரிசுகள் மற்றும் அருக்காணி, சௌந்தரம், முத்துப்பிள்ளை ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

58. ஆனால் வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மேற்படி பெரிய பழனியப்ப நாடார் வாரிசுகளான அர்ஜீனன் மற்றும் பருவதம், துளசிமணி, அருக்காணி, சௌந்தரம், பொன்னம்மாள், சர்மிளா, சங்கீதா மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. மேலும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **<u>கிட்டப்ப நாடார் என்பவரின் ஒரு மகனான செல்லப்பன் என்பவருக்கு 12ம் பிரதிவாதி மனைவி என்றும் அவர்களுக்கு 13ம் பிரதிவாதியும் மற்றும் சுதா, லதா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். மேற்படி சுதா, லதா ஆகியோர்களை நான் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். கிட்டப்ப நாடாரின் ஒரு மகளான சம்பூர்ணம் என்பவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். சின்ன பழனியப்ப நாடார் என்பவரின் ஒரு மகள் பெயர் சௌந்தரம் அவர் பெரலக்காட்டுவலசில் உள்ளார்</u>**

<u>என்றால் ஆமாம். அவரை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன்</u> என்று சாட்சியம் அளித்துள்ளார்.

59. ஆனால் வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மேற்படி கிட்டப்ப நாடார் வாரிசுகளான சுதா, லதா, சம்பூர்ணம் மற்றும் சின்ன பழனியப்ப நாடார் என்பவரின் வாரிசான சௌந்தரம் என்பவரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்தான பாப்பினி கிராமம் க.ச.334 பு.ஏ.3.35 க்கு 3.75 இதில் பொதுவில் 1/3 பு.ஏ.1.12 பூமிகளை கருப்பணநாடார் மக்கள் பெரியபழனி நாடார், சின்ன பழனிநாடார் ஆகியோர்கள் கிட்டப்ப நாடார், கிட்டப்ப நாடார் மக்கள் செல்லப்ப நாடார், குப்பண நாடார் ஆகியர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள்.

60. மேலும் பூர்வீக சொத்துக்களான தாவா சொத்துக்களை பொறுத்து கருப்பண நாடார், கிட்டப்ப நாடார், முத்தப்ப நாடார் ஆகியோர்களுக்கிடையே பைசல் ஏற்பட்டு தனித்தனியாக பாகம் செய்து அனுபவம் செய்து வரப்பட்டது என்று வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாத நிலையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் கருப்பண நாடார், கிட்டப்ப நாடார் மற்றும் கருப்பணநாடார் மக்கள் பெரியபழனி நாடார், சின்ன பழனிநாடார் ஆகியோர்களின் அனைத்து வாரிசுகளும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்ற நிலையில் மேற்படியார்களின் அனைத்து வாரிசுகளும் இவ்வழக்கில் வாதியால் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்ற சங்கதியானது வா.சா.1ன் குறுக்கு

விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா எண்.2 க்கு தீர்வு காண்கிறது.

61. எழுவினா எண்.5 க்கான தீர்வு :-

எழுவினா – 5	To what other reliefs?

62. எழுவினாக்கள் 1 முதல் 4 க்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிக்கு மேற்கொண்டு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் வேறு எதுவுமில்லை என்றும், இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவு தொகைகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்த எழுவினா 5 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக,

தாவா தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.08.31 21:05:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

வாதி தரப்பு சாட்சிகள்:–

வா.சா.1 திருமதி. சாமியாத்தாள் (வாதி)

வா.சா.2 திருமதி. விஜயலட்சுமி (மூன்றாம் தரப்பினர்)

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–

பி.வா.சா.1 திருமதி. உத்தமி (6 ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 திரு. பழனிச்சாமி (மூன்றாம் தரப்பினர்)

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–

வா.சா.ஆ.1	–	வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்
வா.சா.ஆ.2	07.03.2016	தேதியிட்ட வா.சா.ஆ.1 அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்
வா.சா.ஆ.3	04.03.2016	தேதியிட்ட வா.சா.ஆ.1 அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்
வா.சா.ஆ.4	02.03.2016	தேதியிட்ட வா.சா.ஆ.1 அறிவிப்பை 5ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்
வா.சா.ஆ.5	–	வா.சா.ஆ.1 அறிவிப்பை 2, 4 பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அசல்
வா.சா.ஆ.6	12.08.2003	தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண். 206/2002 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.7	03.07.2015	தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண். 110/2008 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.8	17.07.1978	தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.9	30.08.2022	தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண். 206/2022, இ.ம.எண்.426/2013 உத்தரவு சான்றிட்ட நகல்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–

பி.வா.சா.ஆ.1	–	வழக்கறிஞர் அறிவிப்பு நகல்
பி.வா.சா.ஆ.2	–	பதில் அறிவிப்பு அலுவலக நகல்
பி.வா.சா.ஆ.3	10.11.1999	தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட கணினி நகல்
பி.வா.சா.ஆ.4	24.07.2026	தேதியிட்ட புல எண்.1103/2 ஏ பூமிக்கான கணினி சிட்டா
பி.வா.சா.ஆ.5	24.07.2026	தேதியிட்ட புல எண்.1103/2 ஏ பூமிக்கான அ பதிவேடு

<u>நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:–</u>

நீ.ம.சா.ஆ.1	–	இ.ம.எண்.426/2013, அ.வ.எண்.206/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் அளவு வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல்

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.08.31 21:05:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.